**அ.வ.எண்: 52/2022        நாள்: 22.01.2026**
**வா.சா.1 – சின்னையா**

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின்    ஆதார் அட்டை    சரிபார்க்கப்பட்டது.
**முதல் விசாரணை தொடர்ச்சி:**

1. 29.06.2007 தேதியிட்ட பூச்சி மகன் செபஸ்தியானின் இறப்புச் சான்று – கணினி நகல் **வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
2. 04.10.2025 தேதியிட்ட பூச்சி மகன் செபஸ்தியானின் வாரிசுச் சான்று – கணினி நகல் **வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது சிவகங்கையில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய சொந்த ஊர் கிளியூர் என்றால் சரிதான். தாவா சொத்து கிளியூரில் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் 356/3 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 36 சதுர மீட்டர் ஆகும். தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அது என் தந்தையின் சொத்து ஆகும். வாரிசு அடிப்படையில் எனக்கு பாத்தியப்பட்டது. என் தந்தைக்கு நான்

மட்டும்தான் ஒரே வாரிசு என்றால் சரிதான். என் தந்தை எப்பொழுது இறந்தார் என்றால் 2007 ஆம் ஆண்டு இறந்தார். எனது தாயாரும் இறந்து விட்டார். தாவா சொத்தின் கீழ்புறம் யாருடைய இடம் உள்ளது என்றால் பிச்சைமுத்து வீடு உள்ளது. பிச்சை முத்துவின் மனைவி பெயர் என்ன என்றால் ஜெயா ஆகும்.

2. எனக்கு இரண்டு ஆண் குழந்தைகள் மற்றும் ஒரு பெண் குழந்தை உள்ளது. பிரதிவாதி சின்னையாவிடம் நான் கடன் வாங்கினேன் என்றால் வாங்கினேன். சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கினேன். எந்த வருடம் கடன் பெற்றேன் என்றால் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கடன் பெற்றேன். எவ்வளவு தொகை கடனாக பெற்றேன் என்றால் சுமார் பத்தாயிரம் ரூபாய் கடனாக பெற்றேன். நான் யார் மூலமாக கடன் பெற்றேன் என்றால் பிரதிவாதியிடம் நேரடியாக தான் கடனை பெற்றேன். நான் கிளியூர் இளங்கோவன் என்பவரை வைத்து தான் பிரதிவாதியிடம் கடனை பெற்றேன் என்றால் சரியல்ல. நான் கடன் பெறும்போது ஏதேனும் பத்திரத்தில் எழுதிக் கொடுத்தேனா என்றால் இருபது ரூபாய் பத்திரத்தில் எதும்

எழுதப்படமால் இருந்தது. அதில் கையெழுத்து செய்து கொடுத்தேன். மேற்படி பத்திரத்தில் யார் யார் கையெழுத்து செய்தார்கள் என்றால் நானும் என் மனைவி கலாவும் கையெழுத்து செய்தோம். நான் எழுதிக் கொடுத்த பத்திரம் நோட்டரி பப்ளிக் வழக்கறிஞரிடம் கையெழுத்து பெற்றுக் கொடுக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

3. மேற்படி பத்திரத்தில் இளங்கோவன் மற்றும் சந்திரன் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பொதுவாக வெத்து பத்திரத்தில் கையெழுத்து செய்ய மாட்டார்கள் என்றால் அவர் மீது இருந்த நம்பிக்கையில் நான் கையெழுத்து செய்தேன். நான் எதற்காக கடன் பெற்றேன் என்றால் என் மனைவியின் உடல்நலம் சரியில்லாமல் இருந்ததால் மேற்படி கடனை அவசர செலவிற்காக பெற்றேன். என் மனைவிக்கு மூல நோய் இருப்பதால் அறுவை சிகிச்சை செய்வதற்காக மேற்படி கடனை பெற்றேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை இளங்கோவனை வைத்து விலை பேசி விற்பனை செய்தேன் என்றால் சரியல்ல.

4. என் இரு மகன்களுக்கும் திருமணம் ஆகிவிட்டதா என்றால்

ஆகவில்லை திருமண வயதில் உள்ளார்கள் என்றால் சரிதான். எங்களது ஊருக்கு அருகில் தற்போது புறவழிச்சாலை வந்துள்ளதால் நிலத்தின் மதிப்பீடு உயர்ந்து உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என் வீட்டிற்கு கிழக்கு பக்கத்தில் உள்ள ஜெயா அவர்களும் தாவா சொத்திற்கு அதிக விலை தருவதாக சொல்லி என்னை தூண்டி விடுகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா இடத்தை தற்போது அதிக விலைக்கு மேற்படி ஜெயாவிற்கு விற்பனை செய்யலாம் என்றும் அது பதிவு செய்யப்படாத பத்திரத்தில் உள்ளதால் அதனை திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்றும், எனது மகன்கள் தவறாக வழி காட்டுவதால் நான் தாவா வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல, பிரதிவாதி மேற்படி பத்திரத்தை பதிவு செய்ய கேட்டதாகவும் நான் அவசரமாக அறுவை சிகிச்சைக்கு செல்ல இருந்ததால் தற்போது உள்நாட்டு பத்திரமாக எழுதி தருவதாக சொன்னதாகவும், அதனை பிரதிவாதி நம்பியதால் நான் பத்திரத்தை பதியாமல் மருத்துவ சிகிச்சைக்கு சென்று விட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

5. நான் தாவா சொத்து சம்பந்தமான பத்திரத்தை பதிவு

செய்யாததால் தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவசரத்திற்காக தாவா சொத்தை பிரதிவாதியிடம் விற்று பணம் பெற்றுக் கொண்டு தற்போது அதிக விலைக்கு மேற்படி சொத்தை விற்கலாம் என்று தாவா வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி இளங்கோவனை விசாரித்தால் நான் மேற்படி கடனை நேரடியாக பெற்றேனா என்ற விவரம் தெரியும் என்றால் நான் கடன் பெறும்போது இளங்கோவன் இல்லை நடராஜன் மட்டும் தான் உடன் இருந்தார். முதலில் இளங்கோவனை வைத்து பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றால் சரிதான். நான் மருத்துவர் செலவிற்காக தாவா சொத்தை விற்றுவிட்டு மீண்டும் அந்த சொத்தை அதிக விலைக்கு விற்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சட்டப்படியும் நியாயப்படியும் தாவா சொத்து எனக்கு சொந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. நான் தாவா வழக்கில் என் தந்தையின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்து தாவா சொத்து எனக்கு மட்டும்தான் பாத்தியம் அதில் மற்றவர்களுக்கு பங்கு

இல்லை என்பதை நிரூபணம் செய்து உள்ளேன் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்தை எனக்கு பாத்தியப்பட்டது என்றும் அதை நான் பிரதிவாதிக்கு விற்று விட்டதால் அதை நான் திரும்ப கேட்க இயலாது என்று சொன்னால் சரியல்ல, நான் சொத்தை அடமானம் வைத்து கடன் மட்டும் தான் பெற்றேன். நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.01.22 15:00:48 +0530